பரி.பவுல் அஹமதி தமிழ் திருச்சபை-குவைத்

# "அவர் (இயேசு) இங்கே இல்லை, அவர் (இயேசு) உயிர்த்தெழுந்தார்"

லூக்கா 24:6

## JESUS CHRIST IS RISEN



இதழ்:09

மலர்:29

ஏப்ரல் 2026

# செய்திமலர்

www.ahmaditamilchurch.com

# முதன்மை ஊழியரிடமிருந்து



## "இயேசு உயிர்த்தெழுந்தார்"

தேவனுக்குள் பிரியமானவர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகள். நம்மையும் நம் குடும்பத்தையும், நம் சபையையும் பாதுகாத்து நடத்தும் தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. கர்த்தர் இதுவரை நம்மோடு கூட இருந்து நடத்தி வந்திருக்கிறார். இந்த உபத்திரவத்தின் காலங்களிலும் எதுவும் நம்மை மேற்கொள்ளாதபடி காத்து நடத்தும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவோம்.

கடந்த மாதம் ஆராதனைக்கு இடையூரான நாட்களாய் காணப்பட்டாலும் மின் அஞ்சல் வழியாக சில நாட்கள் ஆராதனை நடத்த தேவன் பாராட்டின கிருபைக்கு கர்த்தருக்கு நன்றி செலுத்துவோம். இந்த மாதத்தில் நடக்கவிருக்கும் ஆராதனைகள், ஜெபக்கூடுகைகள், ஊழியங்கள் யாவும் தடையின்றி கர்த்தரின் நாமம் மகிமைப்படும்படி பாரிசுத்த ஆவியானவர் முன்னின்று நடத்தித்தர ஜெபிப்போம்.

தேவனுக்கு பிரியமானவர்களே! லெந்து நாட்களை கைக்கொள்ளுகிற நாம் இயேசு நம்முடைய பாவங்களை ஏற்று நம் துக்கங்களை சுமந்தார். நம் அக்கிரமங்களையும் ஏற்று சொல்லொண்ணா வேதனைகளை நமக்காக அனுபவித்தார் (ஏசா. 53:4-6)

அவர் ஒரு பெரும் குற்றவாளியைப் போல் கைது செய்யப்பட்டார். **“இயேசுவை தந்திரமாய் பிடித்து கொலை செய்யும்படி ஆலோசனை பண்ணினார்கள்”** (மத். 26:4) என்று வேதம் நமக்கு விளங்கப் பண்ணுகிறது.

நம்முடைய எல்லா அக்கிரமங்களுக்காகவும் இயேசுவின் **“சரீரத்தை எடுத்து, துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டி வைத்துப் போனான்”** (மத். 27:59-60) என்ற வேத வசனத்தின்படி நமக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டார் என்பதும் உறுதியாகிறது. ஆனாலும் இயேசு சொன்னபடி **“அவர் (இயேசு) இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார்”** (லூக். 24:6). உயிர்த்தெழுந்த இயேசு இன்றும் நமக்காக பரிந்து பேசுகிறவராகவும் இருக்கிறார் என்பதை நாம் மறக்கக் கூடாது.

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களே! லெந்து நாட்களை கடந்து வந்த நாம் இயேசுவின் உயிர்த்தெழுதலில் பங்குள்ளவர்களுமாக இருக்கிறோம். உயிர்தெழுந்த நாள் என்பது ஏதோ ஒரு **ஆடம்பரமான விழாவிற்குரிய நாள் அல்ல**. இது **கிறிஸ்தவர்களாகிய நம்முடைய விசுவாசத்தின் அஸ்திபாரத்தின் நாள்** என்பதை மனதில் உறுதியாகக் கொண்டு அந்நாளை சிறப்பிப்போம். உயிர்த்தெழுந்த இயேசு என்றும் நம்மோடு கூட இருப்பாராக. தேவனுக்கே மகிமை உண்டாவதாக. சபையோர் யாவருக்கும் உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் நல்வாழ்த்துக்கள்.

கர்த்தர் தொடர்ந்து நம்மையும் நம் குடும்பத்தையும் நாம் வாழும் இந்த தேசத்தையும் காப்பார். யுத்தங்களை ஓயப்பண்ணி சமாதானத்தின் தேவன் தாமே எல்லோருக்கும் பூரண சமாதானத்தை தந்தருள்வார்.

கர்த்தர் கிருபையில்

சகோ. ஆரோக்கியதாஸ். P

**மத்தேயு 28:5-7 "தூதன் அந்த ஸ்திரிகளை நோக்கி ... அங்கே அவரைக் காண்பீர்கள்..."** தூதன் சொன்ன 3 முக்கிய செய்திகளைத் தான் நாம் இங்கே தியானிக்க இருக்கிறோம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை யூதர்கள், வேதபாரகர், பரிசேய மார்க்கத்தார், பிரதான ஆசாரியர்கள் மற்றும் ரோம அதிகாரிகள் என பல்வேறு நிலையிலுள்ள மனிதர்களால் அவர் மனரீதியாக, உடல்ரீதியாக சித்திரவதைக்குட்பட்டு, சிலுவையில் அறையுண்டு கொல்லப்பட்டதைக் கண்ட சீஷர்கள் கலங்கி சிதறிப்போனார்கள்.

வீட்டைப்பூட்டி உள்ளே ஒளித்துக் கொண்டார்கள். வெளி உலக தொடர்பை துண்டித்துக் கொண்டார்கள். ஊழியம் செய்த நாட்களில் இயேசுவானவர் இவ்விதமாய் பாடுபட்டு, மரித்து பின்பு 3- ஆம் நாளில் உயித்தெழுவேன் என்று அவர் சொன்ன வார்த்தைகளை மறந்து போனார்கள். ஆனால் அவரோடு ஊழியம் செய்த பெண்களின் வைராக்கியம் வித்தியாசமாயிருந்தது, துடிப்பு இருந்தது. சிதறி ஓடிய ஆண் சீஷர்களை விட இவர்கள் சிலுவையின் அடிவாரம் வரை வரும் தைரியம் இருந்தது. கல்லை நமக்காக யார் புரட்டுவார்கள் என்ற அங்கலாய்ப்பு இருந்தது. சரீரத்தை காணவில்லையே என்ற பெரும் வேதனை இருந்தது. இவர்களும் மறந்து போன வார்த்தை ஒன்று, ஆம் அது நான் உயித்தெழுவேன் என்ற அவர் சொன்ன வார்த்தைதான். இவர்கள் எல்லாம் இயேசுவோடு ஊழியம் செய்தவர்கள் அவரின் வார்த்தையை கேட்டவர்கள், அற்புதத்தைக் கண்டவர்கள். ஆனால் திரும்ப, திரும்ப இயேசு சொன்ன உயித்தெழுவேன் என்ற அவர் வார்த்தையை மறந்து, கல்லறையை நோக்கிப் பயணித்தார்கள், சுகந்தவர்க்கம் இடப் போனார்கள, முக்கியமாக அவருடைய வார்த்தையை மறந்து போனார்கள்.

**இந்த நிகழ்வு நமக்கு கற்றுக் கொடுக்கும் காரியம் என்ன?**

இன்று நாமும் இதே மனநிலையில் தான் இருக்கிறோம். எத்தனை அருமையாய் தேவன் நமக்கு தந்துள்ள அவருடைய

வார்த்தைகள், வாக்குதத்தங்கள் அனைத்தையும் அறிந்தும் கூட அதனை மறந்து போனவர்களானோம்.

இந்த நிலையில் இருந்த அந்த சீஷர்களை நோக்கி தூதன் சொன்ன வார்த்தை **“பயப்படாதிருங்கள்”** சிலுவையில் அறையப் பட்ட இயேசுவை தேடுகிறீர்கள் என்று அறிவேன் அவர் இங்கே இல்லை.. தாம் சொன்னபடியே உயித்தெழுந்தார்.

## 1. It’s a message of Confidence - **நம்பிக்கையின் செய்தி**

இன்றும் இந்த செய்தி சென்றடையாத பல மனிதர்கள் நம்பிக்கையிழந்து எதிர்காலம், உடல் நலம், குடும்பம் என மரண பயத்தோடு வாழ்கிறார்கள். இந்த உயித்தெழுந்த நாளின் நம்பிக்கை செய்தியான பயப்படாதிருங்கள் என்பது மரித்து மண்ணாகி போனவர் அல்ல, அவர் ஜீவிக்கிற ஜீவனுள்ள தேவன் என்பது சொல்லப்பட்டும், நம் இயேசுவின் வார்த்தை பொய்யானது அல்ல, அவருடைய வாக்குத்தத்தங்கள் நம்பகமானவை எனவே நாம் நம்பிக்கை இழக்க தேவையில்லை என்பதை வெளிப்படுத்துகிற நடமாடும் நிருபங்களாக வாழ்ந்து காட்டுவோம். பலருக்கு இந்த ஜீவாதிபதியை அடையாளம் காட்டுவோம். தூதன் சொன்ன அடுத்த வார்த்தை **“கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள்”** இது உறுதிப்படுத்தும் உயிருள்ள செய்தியடங்கிய வார்த்தை.

## 2. It’s a message of Confirmation - **வந்து பாருங்கள்.**

பார்த்து உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அவர் மரித்து மண்ணாகி போனவர் இல்லை சொன்னபடியே உயித்தெழுந்தார்.

இயேசு உயிரோடு எழுந்தார் என்பது வரலாறு. ஆனால் அது என் வாழ்வின் அனுபவமாக மாற வேண்டும், அது தான் Confirmation க்கு அடையாளம். காலியான கல்லறை வெற்றியின் சாட்சி, சிலுவை மரணம் முடிவு அல்ல, தேவன் சொன்ன வார்த்தைகள் நிறைவேறியதை வந்து பாருங்கள் எனப் பலரை சவால்படுத்தும் மனிதர்களாக வாழ்வோம். வெறும் பெயர் கிறிஸ்தவர்களாக வாழ்ந்தது போதும். ஜீவிக்கிற இயேசுவை நம் சொல்லால், செயலால் வாழ்வின் ஒவ்வொரு நொடியும் வெளிப்படுத்துவொம். தைரியமாய் இயேசுவை

அறியாதவர்களை வந்து பாருங்கள், அவர் ஜீவிக்கிறார் என்பதற்கு நாங்கள் சாட்சிகள் என ஆதாரமாக்குவோம்.

தூதன் சொன்ன அடுத்த வார்த்தை **“சீக்கிரமாய் போய் சொல்லுங்கள்”** இது கட்டளையின் செய்தி.

## 3. It’s a message of Command - **இது ஆலோசனை அல்ல..**

ஒரு முறை மத்திய பிரதேசத்திலுள்ள ஒஹோா மக்கள் இனத்தில் பணிசெய்கிற ஊழியரின் பகிர்வின் பொழுது அவர் சொன்ன வார்த்தை அந்த மக்களின் பிரதான தொழில் திருட்டு, பாலியல் தொழில். அவ்விதமான வாழ்க்கையிழந்த சகோதரியிடம் இயேசுவைப் பற்றி சொல்லப்பட்ட பொழுது அவர் சொன்ன பதில் இந்த நல்ல வாழ்வு கொடுக்கும் கடவுளை கொஞ்சம் முன்னாலே சொல்லியிருந்தால் நான் இந்த தொழிலுக்கு வந்திருக்க மாட்டேனே. என் அப்பா திருட்டு தொழிலால் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்திருக்க மாட்டாரே. ஏன் இந்த தாமதம்..?

II இராஜாக்கள் **7:9 –ல் 4** குஷ்டரோகிகளின் செயல் நமக்கு சொல்லும் செய்தி பொழுது விடியும் மட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும். பிள்ளைகளை சமைத்து சாப்பிடும் அவல நிலையிலுள்ள நம் சமுதாயத்தார் நிலை இன்னும் மோசமாகும், இதை அவர்கள் உணர்ந்ததால் தங்கள் குறைகள், புறக்கணிக்கப்பட்ட நிலையை எல்லாம் பெரிது படுத்தாமல் சொல்ல விரைந்தனர்.

இந்த உயிர்த்தெழுந்த நாளில் இந்த சிந்தனை உணர்வு நமக்குள் வரட்டும், இன்னும் இந்த உயிர்த்தெழுந்த செய்தி அநேகருக்கு அறிவிக்கப்பட வில்லையே என்ற பாரம் நம்மை பற்றிக் கொள்ளட்டும். சொல்லப்பட்டவர்களுக்கே கிறிஸ்து சொல்லப்படும் நிலை மாறட்டும். எதிரே இருக்கும் கிராமங்களுக்கே போங்கள் என்றாரே எதிரேயுள்ள தேவையுள்ள, கேள்விப்படாத மக்களுக்கு சீக்கிரமாய் போய் சொல்லுங்கள். அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார். இன்றும் ஜீவிக்கிறார் என்பதை.

**உங்கள் அனைவருக்கும் உயிர்தெழுந்த நாளின் நல் வாழ்த்துக்கள்.**

கர்த்தர் கிருபையில்

**பாஸ்டர். டேவிட் (FMPB)**

## வாலிபர் பகுதி

# வாயின் வார்த்தைகள்

நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு உமது வாக்கை என்னிருதயத்தல் வைத்து வைத்தேன் **(சங்கீ-119:11)**. பிரியமானவர்களே, நம் வாயின் வார்த்தைகள் தேவனுக்கு பிரீதியாயிருப்பதாக.

## 1. நற்செய்தி அறிவித்தல்

லூாக்-9:26 என்னை குறித்தும் என் வார்த்தைகளை குறித்தும் எவன் வெட்கப்படுகிறானோ, அவனைக் குறித்து மனுஷ குமாரனும் தம்முடைய மகிமையோடும், பிதாவின் மகிமையோடும் வரும் போது வெட்கப்படுவார்.

நற்செய்தி அறிவிப்பது என்பது கர்த்தரை அறியாதவரை இரட்சிப்பின் பாதையில் வழி நடத்த காட்டும் முதல் பாதை. அவரைக் குறித்து அறியாத மனுஷரிடத்தில் நற்செய்தியை அறிவிக்க தேவன் நம்மை முன்குறித்திருக்கிறார்.

## 2. ரகசியம் (காத்தல் ) வெளிப்படுத்தாமை

தூற்றிக்கொண்டு திரிகிறவன் இரகசியங்களை வெளிப்படுத்துவான்(நீதி-20:19)

இரகசியத்தை வெளிப்படுத்துகிற துன்மார்க்கனுடைய வீட்டில் கர்த்தரின் சாபம் இருக்கும். நீதிமான்களின் வாசஸ்தலத்தை கர்த்தர் ஆசீர்வதிக்கிறார்.

நீதி-16:32 தன் மனதை அடக்குகிறவன் உத்தமன். நீதி-25:9 மற்றவனிடத்தில் இரகசியத்த வெளிப்படுத்தாதே.

பெருமை பேசாதே, நீதி-27:2 உன் வாய் அல்ல, புறத்தியானே உன்னை புகழட்டும். தற்புகழ்ச்சியை நாடாதே என்று கர்த்தருடைய வார்த்தை நமக்கு அறிவுரை கூறுகிறது. ஏதாவது தாலந்தை தேவன் நமக்கு தந்து இருந்தால் அது தேவனுடைய பெரிதான கிருபை என்று தேவனை மகிமைபடுத்த வேண்டும். அதுவே கிறிஸ்தவர்களுக்கு உகந்தது.

## 3. குற்றம் சாட்டக்கூடாது

குற்றம் சாட்டுவது சாத்தானின் குணம். வெளி–12:10 குற்றஞ்சாட்டுகிறவன் தள்ளப்பட்டு போனான் என்று வாசிக்கிறோம். கோபத்தை தூண்டி குற்றஞ் சாட்டி புறங்கூறி பேசுபவர்களை தேவன் அருவருக்கிறார். அவர்களுடைய ஜெபமும் கேட்கப்படாது. சங்கீ–39:2 "நலமானதையும் பேசாமல் அமர்ந்திருந்தேன்"

## 4. அந்நிய விக்கிரகங்களின் பெயர்களை உச்சரிக்காதே

சங்கீ–16:4 அந்நிய தேவர்களை நாடாதே என்று வாசிக்கிறோம். யாத்–23:13 அந்நிய தேவர்களின் பேரைச் சொல்ல வேண்டாம் என்று பரிசுத்த தேவன் நமக்கு அறிவுரை கூறுகிறார்.
யோபு–23:7 அந்நிய தேவர்களின் பெயரை நினைக்கவும் வேண்டாம் என்று வாசிக்கிறோம்.
பிரியமானவர்களே, கடுஞ்சொற்கள், பெருமையானவைகளை விட்டு, தேவன் நமக்கு தந்த இனிய நாவினால் குளிர்ந்த மனதுடன் பக்தி விருத்திக்கு ஏதுவான செம்மையான மறுமொழி தந்து தேவனை மகிமைப்படுத்துவோம்.

## 5. பதறி பேசாதே, நிதானமாய் பேசு

நீதி–29:20 தன் வாயினால் பதறி பேசுகிறவனை நம்பாதே என்று வேதம் கூறுகிறது. பொறுமையாக பதில் அளிக்க கற்றுக்கொள்ள வேண்டும். எதை வேண்டுமானாலும் பேசுவேன். எனக்கு உரிமை இருக்கிறது என்று பேசுவதை தேவன் விரும்பவில்லை.
யோபு–42:8 என் தாசனாகிய யோபு பேசினது போல நீங்கள் என்னைக் குறித்து நிதானமாய் பேசவில்லை என்று கர்த்தர் யோபுவிடம் கூறுகிறார். சிந்திப்போம்...

**கிறிஸ்துவின் பணியில்**

ATC Youth Team

Be an Example : I Timothy 4:12

# பெரிய வியாழன்

இதை வியாகுல வியாழன் என்பார்கள்,பெரிய வியாழன் என்பார்கள்,கட்டளை வியாழன் என்று சபையிலே பேசுவார்கள், விசுவாசிகளும் சொல்லுவார்கள், ஏன் என்று சில காரியங்களை பார்ப்போம்.

1.. இந்த வியாழன் இரவில்தான் தன்னுடைய சீடர்களுக்கு திருவிருந்து கொடுத்தார்.

2. திருவிருந்து ஏற்படுத்தியவர் மனிதன் அல்ல, தேவனே

3 . திரு–(மரியாதைக்குரிய), விருந்து– (ஆகாரம் )

4. இந்த விருந்து எல்லோருக்கும் கிடையாது,மனம் திரும்பி, பாவங்களை அறிக்கையிட்டு, ஞானஸ்தானம் பெற்றவர்களுக்கு மாத்திரம் கிடைக்கும்.

5. இந்த விருந்தை சாப்பிடுவதற்கு முன் தன்னைதான் சோதித்தறிந்து கலந்து கொள்ள வேண்டும்.

6. அபாத்திரமாய் கலந்து கொண்டவர்கள்,மரித்தும் இருக்கிறார்கள்,(1 கொரி11:28)

7. இந்த விருந்தின்போது இயேசுகிறிஸ்து மற்றவர்களின் கால்களை கழுவினது போல, கலந்து கொள்கிறவர்களும் தாழ்த்த வேண்டும்.

8. இந்த விருந்தில் கலந்து கௌ்கிறவர்கள், செய்த தவறுகளுக்கு மன்னிப்பு கேட்டு ஒப்புரவாக வேண்டும்.

இந்த விருந்து எங்கே நடந்தது என்றால் மேல் வீட்டில் நடந்தது. லூக்கா 22:12 (2ஆம் வரியை படிக்கவும்)இது ஏன் மேல் வீட்டில் நடந்தது என்றால் திருவிருந்து எடுக்கிறவர்களுக்கு மேலான எண்ணங்கள் உருவாக வேண்டும் என்ற எண்ணத்தில் மேல் வீட்டில் நடக்கிறது. கிறிஸ்தவர்களுக்கு எப்போதும் தூரப்பார்வை இருக்க வேண்டும். Short mind இருக்ககூடாது. பூமியிலுள்ளவைகளை மாத்திரமல்ல மேலானவைகளை நாடவேண்டும். (கொலேசியர் 3:2) நாம் இந்த பூலோகத்திற்கு சொந்தமானவர்கள் எனக்கூறி இந்த விருந்து காலையிலோ மத்தியானத்திலோ நடக்க வில்லை, மாலையில் நடந்தது(மாற்கு 14:17)இந்த விருந்தில் கலந்து கொள்ளும் போது கிறிஸ்துவுடனே ஐக்கியம்கொள்கிறோம். இந்த விருந்தில் அப்பம், ஜிவ அப்பம் பிட்கப்படுகிறது. இந்த அப்பம் எப்படி பிட்கப்பட்டதோ, அதைவிட இயேசுவின்சரீரம் நமக்காக பிட்கப்பட்டது, இந்த அப்பத்தை இயேசுவின் சரீரமாக நினைத்து சாப்பிட வேண்டும். யாத் 12 ஆம் அதிகாரத் தின்படி எந்தெந்த வீட்டின் வாசற்படியில் இயேசுவின் இரத்தம் தெளிக்கப்படவில்லையோ அந்த வீடுகளில் மரணம் ஏற்பட்டது, இந்த நேரத்தில் ஒன்றை தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன் பழைய ஏற்பாட்டில் இரத்தம் தெளிக்கப்பட்டது, ஆனால் புதிய ஏற்பாட்டில் இரத்தம் ஊற்றப்பட்டது, தெளிப்பதற்கு கொஞ்சம் இரத்தம் போதும் ஊற்றப்படுவதற்கு நிரம்ப இரத்தம் தேவைபடும்,தன் சரீரத்திற்கு ஒரு சொட்டு இரத்தம் வைத்து கொள்ளாமல் நமக்காக கொடுத்தார். இரத்தத்தில் உயிர் இருக்கிறது.(லேவி 17:11) இதை ஜீவ அப்பம் இநத அப்பத்தை, அருந்துகிறவர்கள் என்றென்றைக்கும் மரியாமலிருப்பார்கள், இந்த அப்பம் இஸ்ரவேல் மக்கள் வனாந்திரத்தில் சாப்பிட்ட அப்பம் அல்ல. இது ஜீவ அப்பம் என்று கூறி மனம் திரும்பி, ஆயத்தமாகுங்கள்.

சகோ. ஆண்டனி

# இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

" உன் பேரை பெருமைப்படுத்துவேன்
நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் ( ஆதி–12:2 ) "

செல்வி. ஆன்ட்ரியா மகதலேனா தாஸ்
செல்வன். ஈத்தன் செபதியா நவீன்
சகோ. திவ்யராஜ்
செல்வன். ஜெரால்ட் ஜெஸ்டின்
செல்வி.விஷ்ணு பிரியா கண்ணன்
சகோதரி. ஷீஜா கிறிஸ்டோபர்
சகோ. ரிச்சர்ட்சன் டேனியல்
சகோ. சதீஷ் ராஜேந்திரன்
செல்வன். மதன் ராஜ் மகேஷ்
செல்வன். ஆன்டர்சன் அறிவுச்சுடர்
செல்வன். ஆபி சுந்தர் சாம்
செல்வி. ரிஷீ பிரிட்டி
செல்வி. தியா யாழினி சுபின் சிங்
சகோதரி. கண்ணகி வடிவேலு
சகோதரி. செல்வமேரி குணா
செல்வன். கோவர்த்தனன் கோபு
சகோ. ஜெய் சாம் டேனியேல்
சகோ.பென்சாம்
சகோ.குமாரசாமி
செல்வன். வேத ஜெபர்சன் செல்வராஜ்
செல்வி. கிறிஸ்டீனா வெனிஷ்
சகோதரி. கலாராணி ஜெயக்குமார்
சகோதரி. ஜெஸ்லட் வர்க்கீஸ்
சகோ. ஜிவல்சிங்
செல்வி. சாரா சுனில் வின்ஸ்




சகோ. பால் ஜெகநாதன்
சகோதரி. நிஷாந்தி விஜயன்
செல்வி. ரெபேக்கா ஈஸ்டர்ராஜ்
சகோதரி. பத்மினி வர்கீஸ்
சகோதரி. தோர்னி பீட்டர்
சகோ. ரவி ஜான் பீட்டர்
செல்வி. வின்சி டேவிட்
செல்வன். விமல் டேவிட்
செல்வி.ரெவிகா பிரசாத் சுந்தரேசன்
செல்வன். அஸ்ரே தினேஷ்குமார்
சகோதரி. வரலட்சுமி கோபு
செல்வன். ரன்கின் ஜோனு ராபின் ராஜ்
செல்வி. குமாரி ராஜன்
சகோ. எட்வர்ட் சந்தோஷ்
செல்வி. ஷாரன் கீர்த்தனா கிறிஸ்டோபர்
செல்வன். கிறிஸ் ஜான் மனோஜ்
செல்வி. சோனியா மேரி வேளாங்கண்ணி
சகோதரி. விஜயகுமாரி சுந்தர்ராஜ்
செல்வி. ரீனி ரேச்சல் வில்சன்
சகோ. மகேஷ்ராஜ்
செல்வி. எபிஜா ஏஞ்சல் ஜெயக்குமார்
சகோதரி. நிஜா
செல்வி. ஹான்ஸிகா சாம் ஆனந்த்
சகோதரி. ஹேனா ஜோன் வெனிஷ்

# இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும்
சாட்சியாயிருக்கிறார் (மல்கியா 2:14)



திருமதி / திரு. குணா & செல்வமேரி
திருமதி / திரு. ஜிவல் சிங் & ஷீபா
திருமதி / திரு. ஸ்டீபன் & மரகதம்
திருமதி / திரு. பால் டேனியல் & அனுபா
திருமதி / திரு. ஶ்ரீநிவாசன் & ஷர்மிளா



# 2026 – ஏப்ரல் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:30 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 05/4/2026 | உயிர்ப்பு ஆராதனை (Easter) | |
| 12/4/2026 | சகோ. ஜான் போஸ்கோ | சகோ. ஜர்ன்சன் |
| 19/4/2026 | Sis. ஆஸ்லின் சுபின் | Sis. எப்சிபா ஸ்டீபன் |
| 26/4/2026 | சகோ. சதிஷ்குமார் | சகோ. பக்தராஜ் |

## வெள்ளி ஆராதனை மாலை 4:00 முதல் 6:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 03/4/2026 | புனித வெள்ளி ஆராதனை(Good Friday) | |
| 10/4/2026 | சகோ. ரவிஜான் பீட்டர் | சகோ. ஸ்டாலின் |
| 17/4/2026 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 24/4/2026 | சகோ. தாஸ் கருணா | சகோ. ஜெகநாதன் |

## ஆராதனை ஒழுங்குகள்

02/04/2026
பெரிய வியாழன் ஆராதனை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 5:30 முதல்
இரவு 7:30 மணி வரை

சங்கிலி தொடர் ஜெபம்
02/04/2026 மாலை 6:00 முதல்
03/04/2026 காலை 6:00 வரை

09/04/2026
முழு இரவு ஜெப ஆராதனை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம்– இரவு 10:00 முதல்
அதிகாலை 1:00 மணி வரை

18/04/2026
சகோதரிகள் ஐக்கிய கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல்
இரவு 8:15 மணி வரை
வேத வினா பகுதி – I & II தீமோத்தேயு

24/04/2026
வாலிபர் ஐக்கிய கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல்
இரவு 8:15 மணி வரை
வேத வினா பகுதி–சங்கீதம்– 51 To 100 வரை

29/04/2026–Wednesday
Area Prayer Cell
Time-6:30-7:30

### சனிக்கிழமை
சிறுவர் வேதாகம பள்ளி
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 3:30 முதல் 5:30 றை

### திங்கட்கிழமை
பெண்கள் ஐக்கிய ஜெப கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:00 முதல் 7:00 வரை

### செவ்வாய்கிழமை
குடும்ப ஆசீர்வாத ஜெப கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

### வியாழக்கிழமை
பாடல் பயிற்சி கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு
நேரம் – மாலை 6:30 முதல் 8:00 வரை

# 2026 ஏப்ரல் மாதத்திற்கான வேத வினா!

**கீழ்க் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



1. கர்த்தர் எதற்கு சுற்றிலும் அக்கினி மதிலாக இருப்பார் ?
2. கிளை எனப்பட்டவர் யார் ?
3. பாரமான கல்லாவது யார் ?
4. செருபாபேலின் கையிலிருந்தது என்ன?
5. வட தேசத்திற்கு புறப்பட்டு போனது எந்த நிற குதிரைகள் ?
6. சிநெயர் தேசத்திலே வீட்டை கட்ட கொண்டு போகப்பட்டது எது ?
7. யூதாவின் கூடாரங்களை இரட்சிக்கும் நாளில் கர்த்தர் எந்த குடிகளை காப்பாற்றுவார்
8. பிரதான ஆசாரியன் யோசுவாவுக்கு விரோதஞ்செய்ய நின்றது யார் ?
9. ஒரே வார்த்தை அருகருகே இரண்டு முறை வருகிறது அது என்ன வார்த்தை ?
10. பொதுவான கேள்வி – சகரியா புத்தகத்தின் கருப் பொருள் என்ன ?
11. அபிஷேகம் பெற்றவர்கள் எங்கு நிற்கிறார்கள் ?
12. சகரியா கண்களை ஏறெடுத்துப் பார்த்த போது புருஷன் கையில் பிடித்திருந்தது என்ன ?
13. எவர்கள் குடி நிறைந்து சுகமாய் இருந்தார்கள் ?
14. யூத ஜனங்களை கர்த்தர் எதினாலே விடுதலை பண்ணுவார் ?
15. ஜனங்கள் ஏன் சிறுமைப்பட்டார்கள் ?

விடைகளை வருகின்ற 20-04-2026 க்குள்
(WhatsApp - +91 8940523562) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில்

**"சகரியா"**

அதிகாரங்களில் இருந்து பதிலை கண்டுபிடிக்கவும்.

**...தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; – மத்தேயு 7:7**

# 2026- மார்ச் மாத வேத வினாவுக்கு விடை

1. இரசம் குடிப்பதில்லை. மீகா 6:15
2. குறி சொல்லுகிறவர்கள். மீகா 3:7
3. மீகா 5:2
4. தேவ ஜனங்களின் பாவம், தேவனுடைய கடுமையான நியாயத்தீர்ப்பு, தேவன் அருளும் இரட்சிப்பு.
5. ஓரிகள். மீகா 1:8
6. சீயோனை. மீகா 3:10
7. நன்மை. மீகா 6:8
8. மீகா 7:8
9. மனம் போகிற போக்கின் படி போய் அபத்தமானதை உரைக்கிற ஒருவன். மீகா 2:11
10. மீகா 6:8
11. கர்மேல். மீகா 7:14
12. யாக்கோபிலே மீதியானவர்கள். மீகா 5:7
13. சாயனான். மீகா 1:11
14. சூனிய வித்தைகள். மீகா 5:12
15. சேனைகளுடைய கர்த்தருடைய வாய் மீகா4:4

## 2026- மார்ச் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

சகோதரி. பியூலா மெர்சி பால்
சகோதரி. சுகந்தி
சகோதரி. நித்யா ஜோன்ஸ்
சகோதரி. மரகதம் ஸ்டீபன்
சகோதரி. நகோமி ஜான்சன்
சகோதரி. ஜோன்ஸ் ராணி
சகோதரி. ஜீனா சதீஷ் குமார்
சகோதரி. மரிய குளோரி தாஸ்

சகோதரி. ஜாஸ்மீன் பென்சாம்
சகோதரி. சாந்தி
சகோதரி. மெர்சிலின் தயா
சகோதரி. நிஜா
சகோ. எபிநேசர்
சகோ. பால்ராஜ்

# யுத்தம் செய்யும் ஆவியானவர்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே இந்த செய்தி மலர் மூலமாக சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி மற்றும் அன்பின் வாழ்த்துக்கள்.

**எபேசியர் 6:12 "துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும்.. நமக்கு போராட்டம் உண்டு".**

நம்முடைய வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் மிக முக்கிய பங்கு வகிக்கிறார் என்பதை நாம் ஒரு நாளும் மறக்கக்கூடாது. தேவ ஆவியின் நிறைவினால் சந்தோஷம், சமாதானம், மன மகிழ்ச்சி, வல்லமை மற்றும் கிருபை போன்ற ஆசீர்வாதங்களில் நாம் பங்கடைகிறோம் என்பது உண்மை.

அதே வேளையில் நாம் எப்பொழுது இரட்சிக்கப்பட்டு மனம் திரும்பி அபிஷேகம் பெற்றோமோ அந்நாள் தொடங்கி அனுதினமும் பிசாசானவன் நமக்கு விரோதமாய் பலவிதங்களில் எழும்பி கிரியை செய்து கொண்டிருப்பான். நாம் நினைக்கிறது போல நண்பர்களால், உறவினர்களால், வீட்டுக்கு அருகாமையில் உள்ளவர்களால் அல்லது அலுவலகத்தில் வேலை செய்கிறவர்களால் போராட்டங்களை நாம் சந்தித்தாலும் நமக்கு விரோதமாக அவர்கள் மூலமாய் சத்துரு போராடுகிறான் என்பது தான் உண்மை. அந்த சத்துருவோடு யுத்தம் பண்ண நம்மைப் பெலப்படுத்துகிறவர் ஆவியானவரே.

**ரோமர் 8:26–"அந்தப்படியே ஆவியானவரும் நமது பெலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிற படியால், ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெரு மூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்."**

நம்முடைய பெலவீனம் இன்னதென்பதை அறிந்த சத்துரு நமக்கு விரோதமாய் எழும்பும் போது அநேக நேரங்களில் நாம் என்ன செய்வது என்று தெரியாமல் தடுமாறுகிறோம். ஆனால் ஆவியானவர் நமக்குள் வாசம் பண்ணும் போது நம்முடைய பெலவீனங்களில் அவர் நமக்கு உதவி செய்கிறார்.

ஆம் பிரியமானவர்களே! நம்முடைய ஆவியானவர் வைராக்கியம் உடையவர், நம்முடைய உபத்திரவங்களைப் பார்த்துக் கொண்டு அமைதியாக இருக்க மாட்டார், அவர் நமக்கு உதவி செய்கிறவர் மாத்திரமல்ல, நமக்காக யுத்தம் பண்ணுகிறவர். **யாத் 14:14– " கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்; நீங்கள் சும்மாயிப்பீர்கள் "**

எனவே ஆவியில் நிரம்பியிருப்போம். அவரே நமக்காக யுத்தம் பண்ணி நமக்கு ஜெயத்தை தருவார். ஆமென்

கிறிஸ்துவுக்குள் பிரியமான
Sis. **எப்சிபா ஸ்டீபன்**

## மிஷனெரிச்செய்தி
## ஹெலன் ரோஸ்வியர் (1925)

**ஹெலன் ரோஸ்வியர் 1925-ம் ஆண்டு ஹெர்ட்போர்ட்வியரில் ஹெஸ்லிபரி என்ற இடத்தில் பிறந்தார். கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் படித்து வந்தபோது, மெய்யான விசுவாசம் கொண்ட சில மாணவிகளின் அற்புதமான சாட்சியின் வாழ்க்கை இவரைச் சிந்திக்கும்படி செய்தது. இருபது வயதான இவர் தனது போலியான வாழ்க்கையை எண்ணிப் பார்த்து மனம் கலங்கினார். தானும் மெய்யான சமாதானத்தைப் பெற வேண்டுமென்ற வாஞ்சையால், கிறிஸ்துமஸ் விடுமுறையின் போது, வேறெதிலும் அதிகக் கவனம் செலுத்தாது ஒவ்வொரு நாளும் வேதாகமத்தைக் கவனமாகப் படிக்கத் துவங்கினார்.**

**இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் என்ற வசனம் அவரது இருதயத்தைத் தொட்டது. இவர் மனந்திரும்பி தனது மாய்மாலமான வாழ்க்கையை அறிக்கையிட்டு கிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார். கிறிஸ்துவை**

ஏற்றுக்கொண்ட ஹெலன் காலப்போக்கில் தான் ஒரு மிஷனெரி ஆக வேண்டுமென்ற வாஞ்சையைப் பெற்றார். கிறிஸ்துவை நான் நேசிக்கத் துவங்கியபோதே அருட்பணி செய்ய வேண்டும் என்பதைத் தவிர மற்றவை அனைத்தும் இரண்டாம் பட்சமாக ஆகிவிட்டன என்று ஹெலன் குறிப்பிட்டுள்ளார்.

ஹெலன் தனது மிஷனெரி பாரத்தை தன் தகப்பனாரிடம் தெரிவித்தபோது அவர் அதிர்ச்சியடைந்தார். தன்னுடைய மகள் ஒரு மருத்துவராக வேண்டும் என்பதே அவருடைய விருப்பமாக இருந்தது. தந்தையின் விருப்பத்தைத் தட்டிக்கழிக்க ஹெலன் விரும்பவில்லை. எனவே அவர் மருத்துவ அருட்பணியாளராக ஆண்டவருக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்று தீர்மானித்தார். ஜெபத்தில் காத்திருந்த அவர் அதுவே தன்னைக் குறித்த தேவனுடைய சித்தம் என்பதைத் திட்டமாக உணர்ந்தார். நியூஹாம் கல்லூரியில் படித்து, 1951–ம் ஆண்டு தனது 21–ம் வயதில் மருத்துவத்தில் பட்டம் பெற்றார். உடனடியாக ஆப்பிரிக்க அருட்பணி மையத்துக்கு விண்ணப்பம் அனுப்பினார்.

ஆப்பிரிக்க அருட்பணி மையம் இவரை காங்கோ நாட்டில் இபாம்பி என்ற இடத்துக்குச் செல்லும்படி சொன்னது. முன்பின் தெரியாத இடமாயிற்றே அவர்களது மொழி தெரியாதே என்றெல்லாம் எண்ணித் தயங்காமால், தன்னை முழுவதுமாகத் தேவனுடைய கரங்களில் ஒப்புக் கொடுத்து விசுவாசத்தோடு புறப்பட்டார். தனது 28–வது வயதில் ஆப்பிரிக்கா சென்ற டாக்டர் ஹெலன் இபாம்பியில் ஒரு சிறிய மருத்துவமனையைத் துவக்கினார். அவருக்கு உதவியாக ஒருவருமேயில்லை. மொழிப் பிரச்சனையும் அவருக்குப் பெரிய இடையூறாக இருந்தது. போதுமான மருந்துகளும் கிடைக்கவில்லை. இவ்வளவு பிரச்சனைகளும் அவருடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு தூண்டுகோலாக அமைந்துவிட்டன.

ஹெலன் இன்னும் அதிகமாகத் தேவனைச் சார்ந்து செயல்படத் துவங்கினார். தன்னிடம் சிகிச்சைக்காக வந்தவர்களிடம் கிறிஸ்துவைப் பற்றியும் அவர் அருளும் ஆவிக்குரிய குணமாகுதலைப் பற்றியும் ஜெபத்தோடு எடுத்துக் கூறினார். அதுவரை நற்செய்தியைக் கேள்விப்பட்டிராத பலர் கிறிஸ்துவை அறிந்துகொள்ள தேவன் கிருபை செய்தார். 16 வயதான ஜாண் மங்காடிமா மூலம் தாய்மொழியாகிய ஸ்வாஹிலி மொழியை கற்றுக்கொண்டார். உள்ளூர் மொழியை நன்றாகப் பேசக்கற்றுக்கொண்ட ஹெலன் பயிற்சி பெற்ற உள்ளூர்வாசிகளின் துணையோடு 2 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனையையும் கட்டி முடித்தார். வசதியற்ற காட்டின் நடுவே 5 துணை செவிலியர்களுடன் அமைக்கப்பட்ட இந்த மருத்துவமனை ஒரு பெரிய சாதனையே. ஹெலன் மேற்படிப்பிற்காக இங்கிலாந்து சென்றார்.

– தொடர்ச்சி அடுத்த இதழில் –

# Kids Corner

## APRIL MONTH QUIZ FOR CHILDREN

1. Who are Caleb's daughters?
2. Which King's Thumbs and toes were cut off ?
3. Which Judge delivered Isreal First
4. Who was the Left Handed Judge ?
5. Who Killed 600 Philistines with an Ox Goad ?
6. Who was the Prophetess Judge ?
7. Who Killed Sisera ?
8. Who Defeated the Midianites with 300 men ?
9. Gideon asked God for a sign using What ?
10. Who was the only Surviving son of Gideon ?

***Kids Find the answer from the Book of***

"Judges"

**CHILDREN WHO WROTE THE ANSWERS FOR THE MONTH OF MARCH**

Adriel
Andrea
Dan Jacob
Debbie Janet
Felisha
Feshika
Dion
Dhiya

Solomon
Joseph Rejo
Rheul Ashkinaz
Abel Raj
Ebisha
Jayden Paul

# ANSWER'S FOR THE MONTH OF MARCH

1. Pulse and Water ( Daniel 1:12 )
2. God revealed it to Daniel ( Daniel 2:19 )
3. The son of God ( Daniel 3:25 )
4. He lived like an animal for a time ( Daniel 4:33 )
5. Mene.. Mene.. Tekel Upharssin ( Daniel 5:25 )
6. Three Times ( Daniel 6:10 )
7. God send His angel ( Daniel 6:22 )
8. Three Weeks ( Daniel 10:2,3 )
9. An angel ( Daniel 10:5-11 )
10. They shall awake ( Daniel 12:2 )

# FORGIVE

Forgive someone. Today Forgive
Turn from better to positive
End frustration, anger, pain;
Wash the anguish from your brain.

No need to reconcile or tell;
Just feel better and get well;
A brand new, peaceful life to live,
That's your gift, when you forgive.

10/04/2026 – போதுமன்ற கூடுகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு – நேரம் – மாலை 7:00
17/04/2026 - அறுப்பின் பண்டிகை
இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு – நேரம் – மாலை 7:00

# கடந்த மாத நிகழ்வுகளில் உங்கள் பார்வைக்கு சில



# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

### முதன்மை ஊழியர்

**BRO. ஆரோக்கியதாஸ் . P**

99870126

### செயலாளர்

**BRO. தாமஸ்**

66810423

### பொருளாளர்

**BRO. ஜான்சன்**

97610275

### வாலிப ஐக்கிய தலைவர்

**BRO. M. கிறிஸ்டோபர்**

67096449

### பெண்கள் ஐக்கிய தலைவி

**SIS. டெய்சி எபினேசர்**

60686612

**ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்**

யோவான் **12:26**


**Church e-mail ID - ahmaditamil.kw@hotmail.com**
**Church Website Address - ahmaditamilchurch.com**

**Church Postal Address**
**Your Name**
**PO.Box.No.46795**
**Fahaheel-64018**
**Kuwait**



**PRIVATE CIRCULAR ONLY**